முற்பகல் 10–55

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்தின்படி, அதற்கு உரிய அரசு மத்திய அரசு ஆகும். இத்தாவா குறித்து மத்திய அரசின் தொழிலாளர் நலத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று அந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். இது மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டது அல்ல என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(இ) அரூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்ற பெண்கள் இறந்தது குறித்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரூர் மாவட்டத்தில் உள்ள பிரச்சினை குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரைச் சேர்ந்த திரு. பாரதி ராஜேஷ் என்பவரின் மனைவி திருமதி கனகவல்லி, வயது 21 என்பவர் விடுமுறைக்காக நெல்கொண்டையப்பட்டி, தனது பூர்வீக கிராமத்திற்குச் சென்றுள்ளார். நிறைமாத கர்ப்பிணியான அவர், 25–4–2012 அன்று மகப்பேறுக்காக மொரப்பூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு, 28 ஆம் தேதியன்று காலை பிரசவித்து, கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மதிய உணவு நன்றாகச் சாப்பிட்டார். இரவு 7-30 மணிக்கு திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணம் அடைந்தார். அரூர் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்ததில், அவருக்கு அறுவை சிகிச்சை செய்ததனால் அவர் மரணம் அடையவில்லை என்றும்,* Pulmonary Embolism *என்பது மூச்சுக் குழலிலே இரத்த அடைப்பு; அது ஏற்பட்டதால் மரணம் அடைந்தார் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அடுத்து, நெருபாண்டகுப்பம், அரூர் தாலுகாவைச் சேர்ந்த திரு. மணிவண்ணன் என்பவரின் மனைவி, திருமதி சோபனா, வயது

2012 மே 3] [டாக்டர் வி.எஸ். விஜய்]

32 என்பவர், 25–4–2012 அன்று மாலை குடும்ப நலக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்காக அரூர் அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு 26 ஆம் நாளன்று காலை அறுவை சிகிச்சை நடைபெற்றது. அறுவை சிகிச்சை அரங்கிலே அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு மூச்சுவிட சிரமப்பட்டார்.

மேலும், அவருக்கு இருதயத் துடிப்பு குறைந்ததால், தக்க சிகிச்சை முறைகளும், உயிர் காக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. நோயாளியின் உடல் நிலை, நிலைப்படுத்தப்பட்ட பின், மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. தீவிர சிகிச்சை அளித்தும் பயனளிக்காமல், 28 ஆம் தேதியன்று இரவு 11–35 மணிக்கு மரணம் அடைந்தார். 29 ஆம் தேதியன்று மதியம் 1–00 மணிக்கு மூன்று மருத்துவர்கள் கொண்ட குழு, பிரேதப் பரிசோதனை செய்தது. பிரேதப் பரிசோதனை முழுவதும் வீடியோகிராஃப்மூலம் படமாக்கப்பட்டது. பிரேதப் பரிசோதனையின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நிவாரணத் தொகையாக ரூ.50,000/– இறந்து போன பெண்ணின் கணவரிடம் 29 ஆம் தேதியன்று உடனடியாக அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மரணத்திற்கான காரணத்தை ஆராய இரண்டு மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் ஒரு அசோசியேட் பேராசிரியர் கொண்ட சிறப்புக் குழு, 30–4–2012 அன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) தேசிய வேளாண் காப்பீட்டுக் கழகத்தின்மூலம் மேம்படுத்தப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தை விவசாயிகளுக்குச் செயல்படுத்துதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் எழுப்பிய பிரச்சினை குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் தொழிலானது இயற்கையை முற்றிலும் சார்ந்தே உள்ள தொழிலாகும். இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும்போது, விவசாயிகளின் விளைச்சல் பாதிக்கப்பட்டு, மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை ஈடுசெய்ய